**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**

**முன்னிலை திரு.பா.கௌதமன், பி.ஏ.,பி.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை**

ம.சா. 1 நாள் 12.11.2021

| எம்.சி.ஓ.பி. எண் | 191/2018 | | |
|---|---|---|---|
| பெயர் | கணேஷ் | த.பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மனுதாரர். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை தான். வழக்கு விபத்து சம்மந்தமாக வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மசாஆ 1. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மசாஆ 2. மேற்படி வாகனத்தின் பதிவு சான்று மசாஆ 3. மேற்படி வாகனத்தின் காப்பீட்டு சான்று மசாஆ 4. டிஸ்சார்ஜ் சம்மரி மசாஆ 5. எனது ஊனச் சான்று மசாஆ 6. வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அடையாள அட்டை மசாஆ 7.

குறுக்கு விசாரணை

நான் இரு சக்கர வாகனத்தின் சென்ற போது கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான் வேறு வாகனம் மோதவில்லை. இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற குமாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். குமாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் அவருடன் இரு சக்கர வாகனத்தில் செல்லாமல் இருந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான். அதனால் விபத்திற்கு எனது கவனக்குறைவும் ஒரு காரணம் என்றால் சரிதான். இதே விபத்து சம்மந்தமாக கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை நான் தாக்கல் செய்யவில்லை. ஒரு விபத்திற்கு ஒரு நீதிமன்றத்தில் தான் மனு

தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். அவ்வாறு மனு இருந்தால் அதை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். விபத்தின் போது எனக்கு வயது 16. மெக்கானிக்காக வேலை பார்த்தேன். விபத்திற்கு காரணம் நான் பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுநர் தான் என்றாலும், அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், கும்பகோணம் நீதிமன்றத்தில் நான் ஒரு மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாலும் எனது மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது வேலை, வருமானத்தை காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.